



தமிழ்நாட்டின் தென்மாவட்டங்களில் அதிகமாக உற்பத்தி ஆகும் காற்று மற்றும் சூரிய ஒளி மின்சாரத்தை மின் தேவை அதிகமுள்ள மேற்கு மற்றும் சென்னை உள்ளிட்ட வட மாவட்டங்களுக்கும் கொண்டு செல்லும் வகையில் விருதுநகரில் 765/400 கி.வோ. திறனுள்ள துணை மின் நிலையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டு, துணை மின் நிலையம் அமைக்கும் பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன. முதற்கட்டமாக, இத்துணைமின் நிலையத்திற்கு 935 மின்சாரம் கொண்டு வரும் இரு 400 கி.வோ. மின்பாதைகள் கயத்தாறு மற்றும் தென்னம்பட்டி 400 கி.வோ. துணை மின் நிலையங்களில் இருந்து அமைக்கப்பட்டுள்ளன. இவ்விரு மின்பாதைகளுக்கான மின்னூட்டிகள் நேற்று முன்தினம் (21.09.2024) வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் மற்றும் நிதி மற்றும் மின் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டன. இந்நிகழ்ச்சியில் மின் வாரிய இயக்குநர்கள் .அ.ரா.மாஸ்கர்னஸ், திருமதி.எஸ்.லஷ்மி மற்றும் அலுவலர்கள், ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

### அரியலூர் மாவட்ட

# மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி கலந்தாய்வுக் கூட்டம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் பங்கேற்பு!

அரியலூர், செப், 23

அரியலூர் மாவட்ட மகளிர் அணி , மகளிர் தொண்டர் அணி கலந்தாய்வு கூட்டம் மாவட்ட அலுவலகத்தில் மாவட்ட கழக செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமையில் நடைபெற்றது.

நடைபெற்ற கலந்தாய்வு கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளரும், தமிழ்நாடு அரசு போக்குவரத்து துறை அமைச்ச சா.சி.சிவசங்கர், மாநில பிரச்சார குழு செயலாளர் சேலம் சுஜாதா ஆகியோர் கலந்துகொண்டு அரியலூர் மாவட்டத்தில் உள்ள ஒன்றியம், நகரங்களில் புதிய மகளிர் அணி உருப்பினர்களை சேர்க்கவேண்டும், அதேபோல இளம்பெண்கள் பயிற்சி பாசறை அமைப்பது குறித்தும் மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்து விவாதிக்கப்பட்டது. உறுப்பினர் சேர்க்கை மேலும் அதிகப்டுத்துவது குறித்து மகளிர் அணி பொறுப்பாளர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

நடைபெற்ற கலந்தாய்வுக் கூட்டத்தில் மாவட்ட துணை செயலாளர் சி.சந்திரசேகர், ஒன்றிய கழக செயலாளர்கள், தனசேகர், இரா. கென்னடி, பூ.செல்வராஜ், இரா.மணிமாறன், மா.அன்பழகன், கோ.அறிவழகன், ரெ.அசோக் சக்கரவர்த்தி, ஆர்.கலியபெருமாள், வீ. எழில்மாறன், நகர கழக செயலாளர் இரா. முருகேசன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே. சி.லூயிகதிரவன், பேரூர் கழக செயலாளர்கள் ப. கோபால கிருஷ்ணன், அல்போன்ஸ், மாவட்ட மகளிர் அணி அமைப்பா ளர்கள் பானுமதி ராஜேந்திரன், மீனா சாமிநாதன், மாவட்ட மகளிர் அணி தலைவர் விஜய லட்சுமி, மற்றும் மகளிர் அணி நிர்வாகிகள் ராணி சந்திரசேகர், காந்திமதி, பர்வதவர்தினி, இராணி, மலர்விழி ரஞ்ஜித்குமார், எழிலரசி, சித்ரா, மல்லிகை சுந்தரம், பேனிதா, இலக்கியா, மற்றும் மகளிர் அணி,மகளிர் தொண்டணி நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.




சென்னை வடக்கு மாவட்டம் இராயபுரம் கிழக்கு பகுதி சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் பகுதி செயலாளர் இரா.செந்தில்குமார் தலைமையில் நடைபெற்றது. இதில் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, ஆகியோர் ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றினர்.உடன் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி, தொகுதி தேர்தல் பொறுப்பாளர் என்.நவீன், மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### வடகிழக்குப் பருவமழை

# முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை!

## மாவட்ட ஆட்சியர்களுடன் தலைமைச் செயலாளர் மேற்கொண்டார்!

சென்னை, செப். 23-

வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பாக தலைமை செயலகத்தில், மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் துறை உயர் அதிகாரிகளுடன் தலைமைச் செயலாளர் முருகானந்தம் நேற்று காணொலி காட்சி மூலமாக ஆலோசனை நடத்தினார்.

வடகிழக்குப் பருவமழையை எதிர்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

குறிப்பாக, கடந்த ஆண்டு வடகிழக்குப் பருவமழையின்போது பாதிக்கப்பட்ட பகுதிகளை முன்கூட்டியே அறிந்து, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தீவிரப்படுத்த வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர்களை தலைமைச் செயலாளர் முருகானந்தம் அறிவுறுத்தினார்.

**பல்துறையுடன் ஆலோசனை!**

அப்போது அவர் கூறியதாவது:

மண்டல அளவிலான பல்துறை ஒருங்கிணைப்பு ஆய்வுக் கூட்டங்களை நடத்த வேண்டும். குடியிருப்போர் நலச்சங்கங்களுக்கான விழிப்புணர்வு மற்றும் பேரிடர் குறித்த கூட்டம் நடத்தப்பட வேண்டும். சென்னையில் நெடுஞ்சாலை, நீர்வளத்துறை, சென்னை மாநகராட்சி, மெட்ரோ ரயில் மூலம் நடைபெறும் பணிகள் குறித்து ஆய்வு செய்ய வேண்டும். புதிய பணிகளுக்காக சாலைகளைத் தோண்டக்கூடாது. ஏற்கெனவே சாலைகளில் தோண்டிய பள்ளங்களை விரைவாக மூட வேண்டும்.

**படகுகளை தயார் நிலையில் வைத்திடுக!**

வருவாய்த் துறை, காவல்துறை, மீன்வளத் துறையை பேரிடர் மீட்பு மற்றும் எச்சரிக்கை பணிகளுக்குத் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். பேரிடர் மீட்பு உபகரணங்கள், வாகனங்கள், நீர் இறைப்பான்கள், படகுகளை பருவமழை தொடங்கும் முன்பே தாழ்வான பகுதிகளில் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

**வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை!**

வானிலை ஆய்வு மையத்தின் எச்சரிக்கையைப் பின்பற்றி, மழை தொடங்குவதற்கு முன்பாக மாநிலத்தில் அதிக பாதிப்புகளுக்குள்ளாகும் பகுதிகளில் தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படையினை நிலைநிறுத்த வேண்டும். பொதுமக்களுக்குப் புரியும்படி பகுதி வாரியான வானிலை தகவல்களை வழங்க வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.



தமிழ் நாடு மின் கழக தொமுச மாநில தலைவர் – திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக மாவட்ட கழக பிரதிநிதி செந்தமிழ் கே.சசிகுமார் தலைமையில் கழக தலைவர் , இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் டி. ஜெ.கோவிந்தராசன் ஆலோசனை படி தி.மு. கழக பவளவிழா கல்வெட்டு திறந்தும் கழக கொடியை தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் கே.எஸ்.மணி ஏற்றி வைத்தார். உடன் மீஞ்சூர் பேரூர் கழக செயலாளர் க.சு.தமிழ் உதயன், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழ தலைவர் மீ.வீ.கோதண்டம் ஆகியோர் முன்னிலையில் மின் கழக தொமுச நிர்வாகிகள் வரவேற்புடன் நடைபெற்றது. இதில் மீஞ்சூர் பேரூர் கழக நிர்வாகிகள் மற்றும் மின் கழக தொமுச நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



காஞ்சிபுரத்தில் நடைபெறும் பவள விழா பொதுக்கூட்டத்தில் கழக தலைவர் – முதல்வர் அவர்கள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சி தொடர்பாக ஆலந்தூர் வடக்கு பகுதி திமுக பொது உறுப்பினர்கள் கூட்டம் பகுதி அவை தலைவர் வே.டில்லிபாபு தலைமையில் பகுதி நிர்வாகிகளான கோ.கோடீஸ்வரன், ஜெயாசெல்வம், எம்.சையதுஅபுதாஹிர், முன்னிலையில் நடைபெற்றது, இக்கூட்டத்தில் ஆலந்தூர் வடக்கு பகுதி கழகச் செயலாளர் ஆலந்தூர் ப.குணாளன், சிறப்புரை யாற்றினார். உடன் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ் வட்டச் செயலாளர்கள் ஜெ.செல்வேந்திரன், டி.ரவி, மா.கோ.கருணாநிதி, ப.கிருஷ்ணமூர்த்தி, கே.பி.முரளிகிருஷ்ணன், எம்.ஆர்.சீனிவாசன், மாவட்ட பிரதிநிதிகள் கே.பாபுகுமார், ஜி.ஆர்.வெங்கடேசன், த.மனோகரன், ச.பூவாராகவன், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் கலாநிதி குணாளன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்துக் கொண்டார்கள்.

### மூத்த குடிமக்களுக்கான

# புரட்டாசி மாத வைணவத் திருக்கோயில் ஆன்மிகப் பயணம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு கொடியசைத்து தொடங்கி வைத்தார்!

சென்னை, செப்.23-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று முன்தினம் (21.09.2024) திருவல்லிக்கேணி, பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில் இந்து சமய அறநிலையத் துறை சார்பில் செயல்படுத்தப்படும் மூத்த குடிமக்களுக்கான புரட்டாசி மாத வைணவத் திருக்கோயில் ஆன்மிகப் பயணத்தில் பங்கேற்கும் 40 பக்தர்களுக்கு பயண வழிப்பைகளையும், திருக்கோயில் பிரசாதங்களையும் வழங்கி ஆன்மிகப் பயணத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

பின்னர் அமைச்சர் பி.கே. சேகர் பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :-

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான ஆட்சி பொறுப்பேற்ற பின், இந்து சமய அறநிலையத்துறையானது இறையன்பர்கள் மற்றும் மூத்த குடிமக்கள் பங்கேற்கும் கட்டணமில்லா பல்வேறு ஆன்மிகப் பயணங்களை சிறப்பாக நடத்தி வருகிறது. ஏற்கனவே செயல்பாட்டில் இருந்த மானசரோவர், முக்திநாத் ஆன்மிகப் பயணங்களுக்கான அரசு மானியம் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளதோடு, மூத்த குடிமக்களுக்கான கட்டணமில்லா இராமேசுவரம் - காசி ஆன்மிகப் பயணத்தில் இது வரை 500 பக்தர்கள் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். இந்தாண்டு 420 பக்தர்கள் அழைத்துச் செல்லப்படவுள்ளனர். அதேபோல அறுபடை வீடுகளுக்கான ஆன்மிகப் பயணத்தில் நான்கு கட்டங்களாக 813 பக்தர்கள் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். 5ஆம் கட்டப் பயணம் 06.10.2024 அன்று திருத்தணியில் தொடங்கவுள்ளது.

ஆடி மாதத்தில் அம்மன் திருக்கோயில்களு க்கு 1,003 மூத்த குடிமக்கள் கட்டணமில்லாமல் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து, புரட்டாசி மாதத்தில் வைணவத் திருக்கோயில்க ளுக்கு 1,000 மூத்த குடிமக்களை அழைத்துச் செல்லும் ஆன்மிகப் பயணம் 7 மண்டலங்களில் 4 கட்டங்களாக செயல்படுத்தப்படுகிறது. இன்றைய தினம் முதற்கட்ட பயணம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இன்றைய பயணத்தில் தமிழ்நாடு முழுவதும் 270 மூத்த குடிமக்கள் அழைத்துச் செல்லப்படுகின்றனர். சென்னை மண்டலத்தில் 40 மூத்த குடிமக்கள் 5 வைணவத் திருக்கோயில்க ளுக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

இந்த அரசு பொறுப்பேற்றபின், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, திருக்கோயில்களுக்கு தேவையான நெய், ஆவின் நிறுவனத்திலி ருந்து கொள்முதல் செய்யப்பட வேண்டுமென அனைத்து திருக்கோயில்களுக்கும் ஆணையர் அவர்களால் 2021 ஆம் ஆண்டே சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. பழனி திருக்கோயில் பஞ்சாமிர்தம் தொடர்பாக பா.ஜ.க. வை சேர்ந்த வினோஜ் செல்வம், செல்வக்குமார் ஆகியோர் சமூக வலைதளங்களில் விஷம பிரச்சாரம் செய்துள்ளது குறித்து திருக்கோயில் பஞ்சாமிர்தம் தயாரிப்பு பிரிவு கண்காணிப்பாளரால் காவல் துறையில் புகார் அளிக்கப்பட்டுள்ளது. இப்படி தவறான செய்திகளை பரப்புபவர்கள் மீது சட்டரீதியாக கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். பழனியில் முழுமையாக ஆவின் நெய்தான் பயன்படுத்தப்படுகிறது. தேவைக்கு அதிகமாக தேவைப்படும் நிகழ்வில் தனியார் நிறுவனத்திடம் வாங்கப்படுகிறது. அந்நிறுவனம் இதுவரை எவ்வித புகாருக்கும் உள்ளாகாத நிறுவனமாகும். பழனி திருக்கோயிலில் வழங்கப்படும் இலவச பஞ்சாமிர்தம் மற்றும் விற்பனை செய்யப்படும் பஞ்சாமிர்தங்கள் அனைத்தும் உரிய பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு தரமாகவே வழங்கப்பட்டு வருகிறது.

இந்த அரசு பொறுப்பேற்ற நாள் முதல், ஆன்மிகத்திற்கு, இறையன்பர்களுக்கு எதிரான ஆட்சி என்று திசை திருப்பும் முயற்சியில் பலர் செயல்பட்டு வருகின்றனர். அவர்களின் எண்ணங்களை தகர்தெறிந்து புதிய, புதிய திட்டங்களை திராவிட மாடல் அரசு செயல்படுத்தி வருகிறது. தமிழ்கூறும் நல்லுலகமே போற்றி பாராட்டும் வகையில் அனைத்துல முத்தமிழ் முருகன் மாநாட்டினை நடத்தி காட்டியுள்ளோம். இதன் மூலம் அரசுக்கும் முதலமைச்சர் அவர்களுக்கும் ஏற்பட்டுள்ள புகழுக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் எங்கு எந்த பிரச்சனை என்றாலும், அது தற்செயலாக நடந்திருந்தாலும் அதனை ஊதி பெரிதாக்க நினைக்கின்ற கூட்டத்தின் கனவுகள் தகர்க்கப்படும். அவை தமிழ்நாட்டில் ஒரு போதும் ஈடேறாது.

இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களில் 11 திருக்கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானமும், 763 திருக்கோயில்களில் ஒரு வேலை அன்னதானமும், 17 திருக்கோயில்களில் நாள்முழுதும் பிரசாதமும் வழங்கப்பட்டு வருகிறது. இவை சுத்தமாகவும் சுகாதாரமாகவும் தயாரிக்கப்படுவதை கண்காணிக்க துறையில் தனிப்பிரிவு உருவாக்கப்பட்டுள்ளதோடு, உணவு பாதுகாப்பு ஆலோசகர்கள் மூலம் அவ்வபோது பரிசோதனைகளும் செய்யப்பட்டு வருகின்றன. திருக்கோயில்களில் வழங்கப்படும் பிரசாதம் மற்றும் அன்னதானத்தின் தரத்தினை உறுதிபடுத்தி ஒன்றிய அரசின் உணவு பாதுகாப்பு மற்றும் தரப்படுத்துதல் ஆணையம் 523 திருக்கோயில்களுக்கு தரச் சான்றிதழ்களை வழங்கியுள்ளது. ஒன்றியத்திலேயே அதிக எண்ணிக்கையில் தரச் சான்றிதழ்களை பெற்ற மாநிலம் தமிழ்நாடாகும்.

அனைத்து சாதியினரும் அர்ச்சகராக வேண்டும் என்பது சுமார் 2,000 ஆண்டுகள் கனவுத்திட்டமாக, போராட்டமாக இருந்ததை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த போது அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற புதிய திட்டத்தை கொண்டு வந்தார். அதனை செயல்படுத்துவதில் தொடர்ச்சியாக பல்வேறு தடைகள் ஏற்பட்ட நிலையில், தந்தை பெரியார் அவர்களின் நெஞ்சில் தைத்த முள்ளை அகற்றும் வகையில் திராவிட மாடல் அரசின் முதலமைச்சராக தளபதி அவர்கள் பொறுப்பேற்ற பின், இத்திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக 29 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கி செயல்படுத்தினார்கள். அப்படி பணி நியமனம் செய்யப்பட்ட அர்ச்சகர்களை 3 மாதத்திற்கு ஒரு முறை தொடர்பு கொண்டு அவர்களின் தேவைகளை கேட்டறிந்து அந்தந்த திருக்கோயில்களின் செயல் அலுவலர்கள் மூலம் நிறைவேற்றி தந்து வருகின்றோம். தற்போது 26 அர்ச்சகர்கள் தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பணிகளை முழு சுதந்திரத்தோடு கருவறைக்குள் பூஜை செய்தல், தலைமை அர்ச்சகர்களுக்கு உதவி செய்தல் போன்ற பணிகளை சிறப்போடு செய்து வருகின்றார்கள். அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்துகின்ற நிலையில் மாண்பமை உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டதால் தற்சமயம் தடையாணை வழங்கப்பட்டுள்ளது. இந்து சமய அறநிலையத்துறை தடையாணையினை விலக்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இவ்வழக்கு நவம்பர் மாதம் விசாரணைக்கு வரும் போது இத்திட்டம் தொடர்பாக துறை மற்றும் அரசின் சார்பில் தெளிவான விளக்கங்களை மாண்பமை உச்ச நீதிமன்றத்தில் முன்வைக்கப்படும்.

இந்த அரசு பொறுப்பேற்ற பின், கன்னியாகுமரி, புதுக்கோட்டை மற்றும் தஞ்சாவூர் தேவஸ்தான திருக்கோயில்களின் நித்ய பூஜைகள், நிர்வாக செலவினம் மற்றும் பணியாளர்களின் ஊதியத்திற்காக முறையே ரூ. 8 கோடி, ரூ. 6 கோடி, ரூ. 3 கோடி என அரசு மானியம் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. இந்தாண்டும் மானியத்தொகை உயர்த்தி வழங்கப்படவுள்ளது. ஒரு கால பூஜைத்திட்டத்தில் வைப்பு நிதி ஒரு இலட்சத்திலிருந்து 2 இலட்சமாக உயர்த்தப்பட்டு இதுவரை 17,000 திருக்கோயில்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. மேலும், முதன்முறையாக இதன் அர்ச்சகர்களுக்கு மாதந்தோறும் ரூ.1,000 ஊக்கத் தொகையாக அவர்களின் வங்கி கணக்கில் செலுத்தப்பட்டு வருகிறது என்று தெரிவித்தார்.

# தி.மு.க. அயலக அணி மாநில நிர்வாகிகள் கூட்டம்!

## அணியின் செயலாளர் எம்.எம். அப்துல்லா எம்.பி. அறிவிப்பு!

தி.மு.க. அயலக அணி மாநில நிர்வாகிகள் கூட்டம் அயலக அணித் தலைவர் - நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி தலைமையில் கோயம்பேடு ஜே.பி ஓட்டலில் 25.9.2024 புதன்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறுகிறது .

இக்கூட்டத்தில் கழக அயலக அணி இணை மற்றும் துணைச் செயலாளர்கள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.

பொருள்: 1. கழக ஆக்கப் பணிகள்

2. கழகப் பவள விழா மற்றும்

முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா

3. 2026 சட்டமன்றத் தேர்தல்

**எம்.எம்.அப்துல்லா எம்.பி.**

செயலாளர்

தி.மு.க. அயலக அணி



சென்னை வடக்கு மாவட்டம் இராயபுரம் கிழக்கு பகுதி 49 வட்டக் கழகத்தின் சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் வட்டச் செயலாளர் எல்.சீனிவாசன் தலைமையில் பகுதி செயலாளர் செந்தில்குமார்,பொதுக்குழு உறுப்பினர் வே. சிவகுமார் முன்னிலையில் நடைபெற்றது. சென்னை வடக்கு மாவட்ட செயலாளர் ஆர். டி.சேகர் எல் எம் எல் ஏ சிறப்புரையாற்றினார். சட்டமன்ற உறுப்பினர் ஐ ட்ரீம்ஸ் ஆர் மூர்த்தி, மாவட்ட துணை செயலாளர் கமலக்கண்ணன், நாகம்மை கருப்பையா, பிடி பாண்டி செல்வம், தா இளைய அண்ணா, மற்றும் ஏ வேணுகோபால், என் ஏழுமலை, தா ஜெயபால், பீ சேகர், எம் பழனி, எம் வி நசு மணி குமார், கே ஆர் கோபிநாத், ஜி கோதண்டராமன், பா சுதாகர், பன்னீர்செல்வம், பாஸ்கர், எஸ் ராஜசேகரன், ஆர் பாரதிதாசன், ஜி விநாயகமூர்த்தி, கன்னியப்பன், கா பாலகிருஷ்ணன், எம்.தங்கராஜ், கலைச்செல்வன், ஜி.வனிதா மற்றும் பல கலந்து கொண்டனர். .கலைச்செல்வன் மாவட்ட பிரதிநிதி நன்றி கூறினார்.